ஆடி 25 – வழிப்படுத்து குழு சந்திப்பு

விமலசந்திரன், சண், ராங் ஆகியோர் கனடிய பாராளுமன்ற உறுப்பினர் கரி ஆனந்தசங்கரி, ஒன்டாரியோ பாரளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி, நகரசபை உறுப்பினர்கள் தொம்சன், ஐஸ்லீன் முதலான தெரிவுசெய்யப்பட்ட அரசாங்க உறுப்பினர்கள் பலருடனும், கனடிய வீடமைப்பு, ஆதனக்கடன் கூட்டுத்தாபனத்துடனுமான தமது சந்திப்புகள் பற்றிய தகவல்களை இற்றைப்படுத்துவதுடன் இன்றைய சந்திப்பு தொடங்கியது.

குழு உறுப்பினர்கள் சமூக அமைப்புகளிடமிருந்தான ஆதரவுக்கடிதங்கள், மற்றும் சமூகத்திடமிருந்தான கருத்துக்கணிப்புகளின் நிலை பற்றி ஆராய்ந்தார்கள். காட்டமான சமூக நிகழ்வுகளில் கலந்துகொள்வதன் மூலம் கருத்துக்கணிப்புகளைச் சேகரிக்கும் வாய்ப்புகள் பற்றி அலசி ஆய்ந்தார்கள்.

குழு உறுப்பினர்கள் நகரசபையால் பரிந்துரைக்கப்பட்ட அதிகாரபூர்வமான கடித வடிவத்தை ஆராய்ந்து கருத்துகள் தெரிவித்தார்கள். விமலசந்திரன் நகரசபையுடன் கலந்தாலோசித்துக் கடிதத்தின் அறுதியான வடிவத்தினைத் தீர்மானிப்பார்.

விமலச்சந்திரன் தாம் மேற்கொண்ட பூர்வாங்க ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டு நாம் மேற்கொள்ளவிருக்கும் கட்டுமானத்தின் உத்தேச செலவு மதிப்பீடு பற்றி அறிவித்தார். ஆயினும் கட்டுமானத்தின் அறுதியான வடிவமைப்பு தீர்மானிக்கப்படும்வரை செலவீடு பற்றித் துல்லியமாக மதிப்பிடமுடியாது என்றும் தெரிவித்தார்.

நகரசபை மண்டபத்தில் நடாத்தவிருக்கும் பகிரங்க பொதுக்கூட்டத்துக்கான முன்னாயத்தங்கள் கலந்தாலோசிக்கப்பட்டன.